3. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

"1962-63 முதல் 1970-71 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு மின் வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின்மீது பொது நிறுவனங்கள் குழுவின் (1982-83) இருபத்து நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கை."

1. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) விதி 33-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

4. அரசினர் தனித் தீர்மானம்.

இணையத்து ஆட்சி மொழியாக ஆங்கிலம் மட்டுமே தொடர அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துதல்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கும் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"டாக்டர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, தமிழும் மற்ற தேசிய மொழிகளும் இணையத்தின் (Union) ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதன்படியே அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் இதை எய்தும் வரையில், ஆங்கிலம் மட்டுமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும் என்றும் ஆட்சி மொழி பற்றி அரசமைப்புச் சட்டத்தில் உள்ள அத்தியாயத்தை தக்கவாறு திருத்தவேண்டும் என்றும் இந்த மன்றம் 1968 சனவரித் திங்கள் 23-ம் நாள் தீர்மானம் நிறைவேற்றியது.